1979 அக்டோபர் 30]

(முற்பகல் 9—10)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்லவேண்டியிருந்தால் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : விவாதம் வரும்போது சொல்கிறேன்.

This is only an amendment to the existing Industrial Disputes Act —an addition to the I.D.Act — Section 10(b) அவ்வளவுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "1979 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (தமிழ் நாடு திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : சட்ட முன் வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

## (2) தகவல் கோரல்

### காவலர்களது போராட்டம் குறித்து.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அமைச்சரவை யின் கொள்கையைக் கண்டிக்கிற தீர்மானம் இங்கே மொழியப் பட்டு விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நான் தங்களுடைய மேலான கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். 26-ம் தேதி நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் தாங்களும், அவை முன்னவர் அவர்களும், மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்களும் கூடி கலந்து பேசி 27, 29, 30 ஆகிய இந்த மூன்று நாட்களுக்குள் இந்தக் கண்டனத் தீர்மானத்தின் மீதான விவாதத்தை முடித்துவிட்டு அதற்குரிய பதிலை முதல் அமைச்சர் அவர்கள் சொல்வார்கள், அதன் பிறகு கண்டனத் தீர்மானம் பற்றிய முடிவு, வோட்டெடுப்புகள் நடைபெறும் என்றளவில் தான் அன்று நாம் பேசி முடித்தோம். அலுவல் ஆய்வுக் குழுவில் எங்களுக்கிருக்கிற சங்கடமெல்லாம்—எங்களுக்கு மாத்திரமல்ல, உங்களுக்கும் கூடத்தான், அவை முன்னவர் அவர்களுக்கும் கூட இருப்பதாக

நான் உணருகிறேன். அலுவல் ஆய்வுக் குழுவிற்கு பொதுவாக, கடந்த காலங்களில் திரு. பக்தவத்சலம் அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோதும், அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோதும், நான் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்த போதும் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டங்களுக்குச் செல்வது என்பதை ஒரு மரபாக அல்லது முறையாக வைத்திருந்தோம். ஏனென்றால், அது அலுவல் ஆய்வுக் குழுவிற்கு வருகிற கட்சிகளையெல்லாம் மதிக்க வேண்டும் என்பதற்காகக் கூட அல்ல, அவரவர்கள் நிகழ்ச்சி நிரல்கள் எப்படி எப்படி அமைந்திருக்கின்றன, எனவே எந்தெந்த தீர்மானங்கள் அல்லது எந்தெந்த மானியங்கள் அல்லது எந்தெந்தப் பொருள்கள்பற்றி விவாதத்திற்கு என்றைக்கு எடுத்துக் கொள்ளலாம். அப்போது முதல் அமைச்சர் அவர்கள் 'அவைலபிளாக' இருந்து பதில் சொல்ல தேவையான நேரம் ஒதுக்கவேண்டும் என்பதற்கேற்ப அவரவர்கள் நிகழ்ச்சிக் குறிப்பு களை அறிந்து அலுவல்களை நாம் முறைப்படுத்திக்கொள்வது வழக்கம். அதற்காகத்தான் முதல் அமைச்சர் அவர்களும் அந்த அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திற்கு வருவது வழக்கம்.

ஆனால் கடந்த இரண்டரை ஆண்டுக் காலமாக எதிர்கட்சிகளுக் குள்ள துர்ப்பாக்கியம் முதல் அமைச்சர் அவர்கள் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திற்கு வருவதேயில்லை. அவர் வராத காரணத் தால் தாங்கள் அல்லது அவை முன்னவரால் எங்கள் முன்னால் எடுக்கிற முடிவுகளை நாங்கள் மதிக்க மறுப்பவர்கள் என்று பொருள் அல்ல. ஆனால் எடுக்கிற முடிவுகள் இன்றைக்கு நிறை வேற்றப்படுகிறதா என்றால் இல்லை. இந்த இரண்டரை ஆண்டுக் காலத்தில் நிகழ்ச்சி நிரல்கள் ஏதாவது ஒழுங்காக குறிப்பிட்டபடி, குறிப்பிட்ட காலத்தில் நடைபெற்றிருக்கிறதா என்றால் அதுவும் இல்லை என்பதைத் தாங்களும் அறிவீர்கள், அவை முன்னவர் அவர்களும் அறிவார்கள். கட்சித் தலைவர்களும் அறிவார்கள். 30-ம் தேதி அன்று முடித்துவிடலாம் என்று முடிவு எடுத்துக் கொண்டதற்குக் காரணமே, நான் என்னுடைய டயரியைப் பார்த்து எனக்கிருக்கிற அலுவல்களை எடுத்துக் கூறினேன். பொதுக் கூட்டம் என்றால் வேண்டுமானால் அதை ரத்து செய்து விடலாம். ஆனால் ஒரு திருமண நிகழ்ச்சிக்கு, திருவண்ணா மலைக்கு 2-ம் தேதி எனது உறவினர் வீட்டுத் திருமணத்திற்கு செல்ல வேண்டியிருக்கிறது என்று குறிப்பிட்டேன். 30-ம் தேதி அன்றே முடித்து விடலாம் என்று சொன்ன உறுதியின் பேரில் இன்றைக்கு இந்த விவாதம் முடியும் என்று தயாராகிக் கொண்ட நிலையில் இருந்தேன். ஆனால், நேற்றைய தினம் தங்களுடைய ஆணைப்படிஅல்லது அவை முன்னவருடைய ஆணை என்று கூற மாட்டேன். வேண்டுகோள் என்று கூற மாட்டேன், அறி வித்திருக்கிறபடி இப்போது 3-ம் தேதிக்கு இது மாற்றப்பட்டிருக்

கிறது. இது வாடிக்கைதான். வழக்கமாக நடைபெறுவதுதான் 30-ம் தேதி அன்று முடித்திருக்க வேண்டிய விவாதம் 3-ம் தேதிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. இதை முதல் அமைச்சரே அவர்கள் நேரிலே ஆய்வுக் குழுக் கூட்டத்திற்கு வந்து அன்றே தெரிவித்திருப்பார்களேயானால், அல்லது தான் வர இயலாது என்று தெரிவித்திருப்பார்களேயானால் அல்லது தாங்களோ அல்லது அவை முன்னவரோ முதல் அமைச்சருடன் தொடர்பு கொண்டு 30-ம் தேதி அன்று விவாதம் முடிவடையாது என்று தெரிவித்திருந்தால் இந்தச் சிக்கல் ஏற்பட்டிருக்காது. எப்படியோ ஏற்பட்டு விட்டது. எனவே நடந்ததைப்பற்றி இன்று மேலும் ஆய்ந்து கொண்டு இருக்க விரும்பவில்லை. இனிமேல் இவ்விதம் நடக்கக் கூடாது என்பதற்காகத்தான் இதைப் பற்றி நான் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 3-ம் தேதி வரை சில முக்கியமான பிரச்சினைகள், அதற்கு இங்கே கிடைக்க வேண்டிய விளக்கங்கள், தெளிவுரைகள் கிடைக்காமல் இந்த மன்ற உறுப்பினர்கள் மிகவும் சங்கடத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த இரண்டு மூன்று நாட்களாக ஆசிரியர்களுடைய போராட்டம், போலீஸ்காரர்களுடைய போராட்டம், பள்ளிப்பாளையத்தில் தொழிலாளர்களுடைய போராட்டம், இவைகளைப்பற்றி யெல்லாம் எந்தவிதமான தகவலும் கிடைப்பதில்லை. தகவல் கேட்கும் போது, கண்டனத் தீர்மானத்திற்கான பதில் சொல்லும்போது பதில் தரப்படும் என்று சொல்லப்படுகிறது. 'பம்பாய் மெயில்' நாடகத்தில் கதாநாயகன் எல்லாவற்றுக்கும் காலம் வரும் பதில் சொல்லுவேன், காலம் வரும் பதில் சொல்லுவேன் என்று ஒவ்வொரு காட்சியிலும் சொல்லிக்கொண்டேயிருப்பான். அது போல் மூன்றாம் தேதி முதலமைச்சர் பதில் சொல்லுவார், பதில் சொல்லுவார் என்று நமது பேரவை முன்னவர் அவர்கள், புன்னகை புரிந்தவாறு பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார். 3-ம் தேதி வரை பொறுத்திருக்க முடியாதவாறு இன்று பல்வேறு நிகழ்ச்சிகள் நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. போலீஸ் போராட்டத்தின் காரணமாக பஸ்கள் எரிக்கப்பட்டிருக்கின்றன என்ற செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்த முறைகள் வன்முறைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தால் அவை எங்கு கொண்டு போய்விடும் என்பதை நாம் ஆராய வேண்டியவர்களாக இருக்கிறோம், அதே நேரத்தில் சட்டம் ஒழுங்கு அமைதி மேலும் கெட்டுவிடாமல் இருக்கவும், தமிழ்நாட்டில் அமைதியான ஒரு சூழ்நிலை இந்த அரசுக்குத் தேவை என்பதை உணர்ந்து சில விஷயங்களுக்குத் தெளிவான பதிலை அளித்தாக வேண்டும். நயினார்தாஸ், காவல் துறை சங்கத் தலைவர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். சிறையிலிருந்து அறிக்கை வருகிறது. எந்த நிலையில் இந்த அறிக்கை வருகிறது. அவரால் இந்த அறிக்கை கொடுக்கப்படவில்லை

என்று சொல்லுகிறார்கள். அவரை வெளியில் விட்டால் தான் அறிக்கை விடவில்லை என்று மறுத்து விடுவார் என்று அரசின் சார்பில் வாதாடுகிறவர், இவரை வெளியே விட்டால் தான் இந்த அறிக்கையைக் கொடுக்கவில்லை என்று சொல்லிவிடுவார் என்ற கருத்தைச் சொல்லி, அறிக்கை கொடுத்தது யார் என்கின்ற பேருண்மையை அவரை அறியாமலேயே குறிப்பிட்டிருக்கிறார். நயினார்தாஸ் இந்த நிலைமையை விளக்க வேண்டும். விளக்க முடியாத அளவில் இன்றைக்கு இருக்கிறார், ஏனென்றால் அவரைப் பார்ப்பதற்கு இன்டர்வியூ மறுக்கப்படுகிறது. உற்றார் உறவினர்களுக்குக் கூட இன்டர்வியூ மறுக்கப்பட்டிருப்பதாக செய்தி வருகிறது. செய்தியாளர்கள் பார்ப்பதற்கும் இன்டர்வியூ மறுக்கப்பட்டது. இப்படி பல்வேறு பயங்கரமான சூழ்நிலை, நிலவிக் கொண்டிருக்கும்போது, முதலமைச்சர் இறுதியில் தருவார் என்கின்ற நிலைமை இல்லாமல், அவை முன்னவர் அவர்களே இதற்கான சில விளக்கங்களை தருவது, எங்களுக்கு மட்டுமல்ல, நாட்டுக்கும், சமுதாயத்திற்கும் நல்லதாக இருக்கும் என்பதை சொல்லி, இதற்கான விளக்கங்களை சொல்லுவார்கள் என்று அவரிடமிருந்து எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, அலுவல் ஆய்வுக் குழுவில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை ஒன்று விடாமல் அப்படியே தொகுத்து இந்த அவையில் தந்து விட்டு பழைய விஷயங்களைப் பற்றி பேசிக் கொண்டிருக்க விரும்பவில்லை என்றும் சொல்லி, சொல்ல வேண்டியவைகள் அனைத்தையும் சொல்லிவிட்டு, சாட்டப்பட வேண்டிய குற்றச்சாட்டுக்களையும் எங்கள் மீது போட்டு விட்டு, விளக்கங்களையும் கேட்டு விட்டு நமது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் உட்கார்ந்து இருக்கிறார்—புன்னகை பூத்துக் கொண்டல்ல—கொஞ்சம் சீரியஸாக, அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப் போல் 29-ம் தேதியோடு இதை முடிப்பது, அப்படி முடிக்க முடியாமல் போனால் 30-ம் தேதி முடிப்பது என்று தற்காலிகமாக எல்லா கட்சித் தலைவர்களும் மற்றவர்களும் நிர்ணயித்தது உண்மை. 29-ம் தேதி நான் எதிர்கட்சித் தலைவர் அவர்களோடு தொடர்பு கொண்டு இன்றைக்கு முடித்துவிடலாம் என்று நான் கருதுகிறேன். நீங்களும் இன்றைக்கு 12-30 மணிக்கு காலையில் பேசுங்கள், நண்பகலுக்குப் பிறகு பதில் பேசுகின்ற முதலமைச்சர் அவர்கள் பேசிவிட்டு, அதற்குப் பிறகு வாய்ப்புகள் தேவைப்பட்டால் எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்களும், அதற்குப் பிறகு தேவையானால் விளக்கம் தருவதற்கான வாய்ப்பு கிடைக்குமானால், முதலமைச்சர் அவர்கள் பேசுவார்கள் என்று சொன்னபோது, ஒரு நியாயமான கருத்தைச் சொன்னார்கள்.

**1979 அக்டோபர் 30]** [திரு. கி. மனோகரன்]

இன்றைக்குத்தான் சேலத்திலிருந்து வந்தேன், உடல்நலம் சரியில்லை. எந்தக் காரணத்தைக் கொண்டும் நான் இன்று பேசுவதாக இல்லை. அது மட்டுமல்ல, இன்றைக்கு அவைக்கு வர மாட்டேன் என்று சொல்லிவிட்டு, வேண்டுமானால் நான் பேச வில்லை, நான் துணை மானியக் கோரிக்கை மீது பேசுகிறேன், எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசட்டும் என்று சொன்னார்கள். இது அவர்கள் கவனத்தில் இருக்கும் என்று நம்புகிறேன். இதை உங்களுக்கும் தெரிவித்தேன், அதற்குப் பிறகு இந்த கருத்தை முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்த போது, மனம் வருந்தி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வேதனை யடைந்து தான் இதைச் சொல்லியிருக்கக் கூடும், ஆகவே நிச்சயமாக அவர் பேசும்போது நான் இருக்க வேண்டும், நான் பேசும்போதும் அவர் இருக்க வேண்டும், நான் நாளைக்கு மது ரைக்குச் செல்லுகிறேன், ஆகவே நாளைக்குப் பேச இயலாது, அவரால் இன்றைக்குப் பேச இயலாது என்கிறார். என்று சொன்

(முற்பகல் 9—20)

னதைதிருப்பியும், எதிர்க்கட்சித் தலைவருக்குச் சொன்னபோது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உடனடியாக அலுவல் ஆய்வுக் குழுவிற்கு வந்திருந்தார். அவர் சொன்னார்—30-ம் தேதி அவருக்கு மதுரையிலே நிகழ்ச்சி இருக்கிறது. 31-ம் தேதி திரு வண்ணாமலையில் தவிர்க்க முடியாத காரணத்தினால் நான் கல்யாணத்திற்கு செல்ல வேண்டியிருக்கிறது. 1-ம் தேதி விடு முறை. 2-ம் தேதி ஒரு திருமணம். ஆக 3-ம் தேதி வைத்துக் கொள்ளலாமா என்று கேட்டபோது, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள்—எங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்று சொல்லிவிட்டு, முதல் அமைச்சர் அவர்களிடம் கேளுங்கள், அன்றைக்கு ஓய்விருக்கிறதா என்று கேட்டு, முதல் அமைச்சர் அவர்களும் ஏற்றுக் கொண்டு, 3-ம் தேதி முடிவு செய்யப்பட்டது. அலுவல் ஆய்வுக் குழுவில் நடந்தது இதுதான்; உண்மை.

அதற்குப் பிறகு அலுவல் ஆய்வுக் குழுவிற்கு முதல் அமைச்சர் அவர்கள் வருவதில்லை, வருவதில்லை என்று அவர்கள் குற்றம் சாட்டினார்கள். அவைக்கு வருவதில்லை; அலுவல் ஆய்வுக் குழுவிற்கு வருவதில்லை என்றும் குற்றம் சாட்டினார்கள். நான் அன்றைக்கேகூட சொன்னேன்--என்ன இருந்தாலும் சரி, என்ன கருத்து மாறுபாடு இருந்தாலும் சரி, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு முதல் அமைச்சர் அவர்கள் மீது அன்பு, பற்று, பாச உணர்வு இருப்பதை நான் உணர்கிறேன். அவர்கள் வரவேண்டு மென்று அவர் விரும்புகிறார். நான் அந்த அடிப்படையில் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு, தெரிவித்துக் கொள்ள விரும்பு வது, நிச்சயம் இனிமேல் தொடர்ந்து ஒவ்வொரு அலுவல்

ஆய்வுக்குழு கூட்டத்திற்கும் அவர் வருவார். அது மட்டுமல்ல, அவையிலே நீங்கள் அவரைப் பார்க்கலாம். மகிழ்ச்சியோடு பேசலாம், அந்த வாய்ப்பினை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், இந்த மன்ற உறுப்பினர்களும் பெற இருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு, காவல் துறையைப் பற்றியெல்லாம் இங்கே பேசப்பட்டது. அந்தக் காவல் துறையைப் பற்றி பத்திரிகைகளிலே வருகின்ற செய்திகள் எல்லாம் அச்சம் ஊட்டுவதாக இருக்கின்றன, எப்படிப்பட்ட அமைதி இருக்கின்றது என்று எங்களுக்குத் தெரியவில்லை என்றும், அதற்குப் பிறகு நைனார் தாஸ் ஒருவரைப்பற்றியெல்லாம் இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். இதைப்பற்றி இதுவரை பேசிய அத்தனை உறுப்பினர்களும் பேசியது மட்டுமல்ல, இன்னும் பேசயிருக்கின்றார்கள் என்பதையும், அதற்குப் பிறகு திட்டவட்டமான, தெளிவான இதைப் பற்றிய கருத்துக்களை போலீஸ் துறையை தன் கையிலே வைத்துக் கொண்டிருக்கும் முதல் அமைச்சர் அவர்கள் இந்த அவைக்குத் தர இருக்கிறார்கள் என்பதையும் நான் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒன்றை மட்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். ஏராளமான பேர் வேலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி இன்றைக்கு காலை நான் பெற்றேன். ஆக, அமைதி கெட்டு விட்டது என்றோ, பெருமளவில் கொந்தளிப்பு தமிழகத்தில் உருவாகியிருக்கிறது என்றோ கருதுகின்ற அளவுக்கு சூழ்நிலை இல்லை என்பதை நான் அழுத்தம் திருத்தமாக இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். எந்தக் காரணத்தைக் கொண்டும், ஏதோ ஒரு மட்ட நிலை தமிழகத்தில் இருக்கிறது என்று கருதி, யாரும் யாரையும் ஏமாற்றிக் கொள்ள வேண்டாம் என்று குறிப்பிடுகின்ற அதே நேரத்தில்—அக்கறை இருப்பது நியாயம்—கூடி கலந்து பேச வேண்டுமென்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். இந்த உணர்வை நான் இதய பூர்வமாக ஏற்றுக் கொள்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், அவர் கருதுகிறபடியோ, கற்பனை செய்கிறபடியோ நாட்டில் பீதி தாண்டவமாடவில்லை, அமைதி அரசோச்சுகிறது. அதாவது ஒரு சில மாவட்டங்களில், ஒரு சில இடங்களில் மிகச் சாதாரணமான சம்பவங்கள் நடைபெற்று இருக்கின்றன என்பதையும், அவைகளை இங்கே விவாதிப்பது என்பது பொருத்தமற்றது, தேவையற்றது. ஒரு பீதியையோ அல்லது மனக் கிலேசத்தையோ தமிழ்ச் சமுதாயத்தின் மத்தியிலே கிளப்ப வேண்டாம் என்று நான் இந்த நல்ல நேரத்திலே எதிர்க் கட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

1979 அக்டோபர் 30] [திரு. கி. மனோகரன்]

பரிபூரணமான அவருடைய ஒத்துழைப்பு அதற்குக் கிடைக்கும் என்று கருதுகிறேன். ஏனென்றால் இது ஒரு கட்சிப் பிரச்சினை அல்ல. நாளைக்கு இனி ஒரு கட்சி ஆட்சிக்கு வந்தாலும் சரி, நாம் சந்தித்துத் தீர வேண்டிய ஒன்று என்பதை மறந்து விடக் கூடாது. நிரந்தரமாக சட்டத்தையும், அமைதியையும் பரிபாலிக்க வேண்டிய ஒரு படை அல்லது துறை தனது கடமையில் இருந்து நழுவுமானால் அப்படி நழுவுகிற அந்தத் துறையைச் சார்ந்தவர்கள்—குறிப்பாக காவல் துறையைத்தான் நான் சொல்கிறேன்—ஒரு வேளை எதிர்க் கட்சித் தலைவரவர்களை அணுகுவார்களானால் அவர்களுக்குப் புத்தி சொல்லி, உங்களுடைய கோரிக்கைகளை எங்களிடம் தாருங்கள், எந்த காரணத்தைக் கொண்டும் போராட்டத்தில் ஈடுபடாதீர்கள், இது நல்ல மரபாக இருக்க முடியாது என்று அறிவுரை சொல்லி அவர்களை வேலைக்குப் போகச் சொல்லிவிட்டு, பின்னர் எல்லோரும் கூடி அவர்களுடைய பிரச்சினையை விவாதிப்பதுதான் நியாயமாக இருக்க முடியுமே தவிர, அவர்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும்போது அவர்கள் சார்பாக நாம் வாதாடுகின்ற அளவுக்கு ஒரு நிலையை எடுப்போமானால்—ஏழாண்டுக் காலம் முதலமைச்சராக இருந்த எதிர்க் கட்சித் தலைவருக்கு நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை—பயங்கரமான பரிசோதனைக்கு நம்மை நாமே அறியாமல் உட்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதை மறந்து விடக் கூடாது என்று அவர்களை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : அவை முன்னவர் அவர்கள் எனக்குள்ள பொறுப்புணர்ச்சியைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். நான் அவர்களுக்கு மெத்தப் பணிவோடு ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். போலீசாருடைய போராட்டம் தொடங்கிய நேரத்தில் நானும் மற்றக் கட்சித் தலைவர்களும் இப்படிப்பட்ட ஒரு போராட்டம் தொடங்கிவிட்டது என்ற செய்தியை சிதம்பரத்தில் கேள்விப்பட்டு அதற்காக நாங்கள் கலந்து பேசி வருத்தம் தெரிவித்துக் கொண்டவர்கள். ஆனால், மறுநாள் காலைப் பத்திரிகையில் பார்த்தால்—இரயிலில் செங்கற்பட்டு ஸ்டேஷனில் பார்த்தேன்—மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ''போலீசார் போராட்டத்தைக் கருணாநிதிதான் தூண்டிவிட்டிருக்கிறார்'' என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே, பொறுப்போடு நடந்து கொள்வது யார் என்பதை அவை முன்னவர் அறியாதவர் அல்ல.

கற்பனையாக வேண்டுமென்றே பதட்டநிலை நாட்டில் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லவில்லை. காவல் துறையினர் மூவாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இன்றைக்கு கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் குடும்பப் பெண்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதனால் ஏற்பட்டிருப்பது பதட்ட நிலை

அல்ல என்று நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளக் கூடாது. அணுகுமுறை சரியாக இருக்குமானால் அனைத்துக் கட்சிகளும் அரசோடு ஒத்துழைப்பதற்குத் தயாராக இருக்கிறது என்பதை இப்போதும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, நயினார்தாஸ் பற்றி ஒன்றும் சொல்லவில்லை...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்சினை தீர்ந்து விட்டது.

திரு. துரை முருகன் : பாயின்ட் ஆப் ஆர்டர். நயினார்தாஸ் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவை முன்னவரவர்கள் அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. அந்த அறிக்கை பொய்யானது என்று பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. நேரடியான பதிலை முன்னவர் அவர்கள் சொல்ல வேண்டும். நயினார்தாஸ் உயிரோடு இருக்கிறாரா என்பதை அவர் கூற வேண்டும்.............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்சினையை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பினார்கள். தாங்கள் புதிதாக அந்த பிரச்சினையை எழுப்புவது சரியல்ல. தங்களுக்கும் கேட்க உரிமையுண்டு. ஆனால், உங்கள் கட்சித் தலைவர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். '' நயினார்தாஸ் உயிரோடு இருக்கிறாரா'' என்று திரு, துரைமுருகன் கேட்ட கேள்வி அவைக் குறிப்பிலிருந்து......

திரு. துரை முருகன் : நீக்குவது நியாயமல்ல. அந்த அறிக்கை உண்மையானதா என்று தெரியவில்லை..........

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தயவு செய்து, துரை முருகன் கேட்ட கேள்வியை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தங்களுக்கு வேண்டுகோளாக வைக்கிறேன். நயினார்தாஸ் உயிரோடு இருக்கிறார், ஒழுங்காக இருக்கிறார், ஆரோக்கியத்தோடு இருக்கிறார், மகிழ்ச்சியோடு இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஒரு கேள்விக்கு இப்படிப் பதில் சொன்னால் மேலும் மேலும் கேள்வி கேட்டுக் கொண்டே போவார்கள். அவை முன்னவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க திரு. துரைமுருகன் பேசியது குறிப்பில் இருக்கட்டும்.